**கங்க இஹல கோரலை பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 21 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக் கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கங்க இஹல கோரலை பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | புதிய பிரதேச சபை கட்டிடத்தின் பெறுமதி ரூபா 457,500 தொகை கூடுதலாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | சரி செய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | கெப் வண்டியின் பெறுமதி ரூபா 160,000 தொகை குறைவாக கணக்கிடப்பட்டிருந்தது. | சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சீர் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்கள் பிரகாரம், 02 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் துணை பதிவேடுகள் இடையில் ரூபா 65,199 ஆன இணங்காமை நிலவியது. | வித்தியாசத்தை இணக்கம் செய்து சீராக்கம் செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டது. |

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சி இருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 105,114 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்குமிடையிலான நிலுவை மீதி ரூபா 1,065,015 ஆனது. | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீதியின் ஒரு பகுதி கிடைத்துள்ளதுடன், எஞ்சிய தொகையை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 82,142 மற்றும் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளிற்குமிடையிலான நிலுவை மீதி ரூபா 1,826,348 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒரு பகுதி தீர்க்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் மீதியை செலுத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை**

தகவல்கள் சமர்பிக்கப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுத் தொகை ரூபா 77,122,268 ஆன 03 காணி மற்றும் கட்டிட உருப்படிகளை உறுதி மற்றும் ஒப்படைக் கட்டளைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடபடும் கணக்கு மீதிகளை உறுதி செய்யும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 ஆண்டில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது. |

**1.3.5 இணங்காமை**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடன்** இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமை தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதி ஒழுங்கு | | | |
| 218 பிரிவு | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக ஆய்வொன்றை மேற்கொண்டு பரிசோதனை அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆய்வு நடைபெறுவதனால், முடிவடைந்த பின்னர் அறிக்கையிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| நி.பி. 571(02) | 02 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 5,403,582 பெறுமதியான வைப்புக்களை அரச வருமானத்திற்கு எடுக்க அல்லது தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறித்த தரப்பினரை அறிவூட்டி, முற்செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 20,688,111 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 15,466,363 ஆனது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 2,276,000 | 3,200,819 | 2,928,850 | 993,625 | 2,136,000 | 2,330,256 | 2,431,826 | 1,422,113 |
| (ii) | வாடகை | 6,172,000 | 7,492,886 | 7,032,537 | 723,390 | 5,419,000 | 4,467,906 | 4,530,665 | 512,524 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 785,200 | 1,013,141 | 1,128,859 | 560,700 | 1,220,200 | 1,324,116 | 1,326,912 | 351,200 |
| (iv) | ஏனைய வருமானம் | 65,956,815 | 57,920,030 | 46,089,542 | 15,441,695 | 57,029,965 | 48,126,720 | 35,348,790 | 27,637,147 |
| | கூட்டுத் தொகை | 75,190,015 | 69,626,896 | 57,179,790 | 17,719,410 | 65,805,165 | 56,248,998 | 43,638,193 | 29,922,986 |

### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 861,731 ஆன தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) ஏக்கர் வரி** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 92,723 ஆன ஏக்கர் வரி வருமானமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை ஏக்கர் வரி அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏக்கர் குத்தகைகாரர்களை கண்டறிய முடியாததால், அறவிடுவது பிரச்சினைக்குரியது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **கடையறை வாடகை** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் அறவிட வேண்டிய ரூபா 631,994 ஆன வருமானமொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடையறை வாடகை அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 681,332 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,745,386 ஆனது. | பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும். | குறித்த நிறுவனங்களை அறிவூட்டி, துரிதமாக அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் ரூபா 2,665,440 செலவில் கழிவுப் பொருள் மீள்சுழற்சி கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்ட போதும், மீள்சுழற்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்படவில்லை. | சொத்துக்களிலிருந்து பயன் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஜனவரி மாதம் மீள்சுழற்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் அதிகார எல்லையில் பொது மக்களிற்காக பல்வேறு நடவடிக்களை செயற்படுத்திய போதும், அவைகள் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுடன் எவ்வாறு, இணங்குமென்பது தொடர்பாக ஆய்வொன்று மற்றும் பின்னூட்டல் செயற்பாடொன்று செய்யப்படவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை தொடர்பான பின்னூட்டலொன்று செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் பின்னூட்டல் செயற்பாடு மற்றும் அறிக்கை தயாரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வெளி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்கையில், இருதரப்பினரின் இணக்கப்பாட்டுடன் உடன்படிக்கை செய்யப்பட வேண்டிய போதும், கணனி மென்பொருள் கொள்வனவின் போது, தெரிவு செய்யப்பட்ட நிறுவனம் தயாரித்த உடன்படிக்கையில் தவிசாளர் மற்றும் செயலாளர் 2014 ஆகஸ்ட் 22 ஆம் திகதி கைச்சாத்திட்டிருந்தனர். | வெளித் தரப்பினருடனான உடன்படிக்கை முறையாக செய்யப்பட வேண்டும். | 2020 ஆண்டில் புதிய உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஊழியர் வெற்றிடமும் மிகையும் | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையினுள் 06 வெற்றிடங்கள் நிலவின. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணியை பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். | ஆட்சேர்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ஊழியர் கடன் | | |
| | இடமாற்றம் பெற்றுச் சென்ற அலுவலர் ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 240,700 ஆன கடன் மீதி அறவிடப்படவில்லை. | கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அதிகார எல்லையில் காணப்படும் 06 நீர் உத்தேச திட்டங்கள் செயலற்று நிலவின. | நீர் உத்தேச திட்டங்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள வேண்டும். | விடய பொருப்பு அமைச்சரிற்கு உரிய தகவல்களை சமர்பித்து, முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செய்யப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 7,915,750 பெறுமதியான 04 ஏலவிற்பனை காணித் துண்டுகள் பொது மக்களின் தேவைக்காக அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களிலிருந்து உச்ச பயனை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 3.5.2 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பதிவிடப்பட்டுள்ள ரூபா 75,235,788 பெறுமதியான நிலையான சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணிப்பீட்டின் பின்னர் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ரூபா 10,556,354 செலவில் நிர்மாணிக்கப்பட்ட எத்கால வியாபார கட்டிடத் தொகுதி கட்டிடத்தை நிலையான சொத்தாக இனங்கண்டிருக்கவில்லை. | நிலையான சொத்துக்களை சரியாக இனங்காண வேண்டும். | 2020 ஆண்டில் சீர் செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | எத்கால மற்றும் குருந்துவத்த வியாபார கட்டிடத் தொகுதி அமைந்துள்ள காணிகளை சபைக்கு சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை முறையாக சுவீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுவீகரிப்பதற்கான முன் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

#### 3.5.3 விளைவற்ற/குறை பயன்பாட்டு சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான ரூபா 302,540 பெறுமதியான 03 வாகனங்கள் விளைவற்று நிலவின. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | ஏலத்தில் விற்க மற்றும் உரிய ஏனைய செயற்பாடுகளை செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | ரூபா 185,000 செலவில் 2007 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட கொன்கிரீட் கலவை இயந்திரம் விளைவற்று நிலவியது. | சபைக்கு சொந்தமான சொத்துக்கள் பயன்படுத்தப்பட வேண்டும். | ஏலத்தில் விற்க உரிய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 4. கணக்களிபொருப்பு மற்றும் நள்ளாழுகை

### 4.1 தீர்க்கப்படாத அவதானிப்புகள் மற்றும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 – 2.2.2(அ)(iii) | | |
| | நிலுவை வீதவரி அறவிட வேண்டிய 117 வீதவரி அலகுகள் தற்பொழுது வரை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | வீதவரி அலகுகளை சரியாக இனங்காண வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தை அறிவூட்டியுள்ளதுடன், முன் நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2018 – 3.2(இ) | | |
| | சபை குத்தகையிற்கு வழங்கியுள்ள 10 காணிகளின் குத்தகை வாடகை 2007 ஆண்டின் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குத்தகை வாடகை மீள்மதிப்பீடு காலத்திற்கேட்ப மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீட்டு திணைக்களத்தை அறிவூட்டியுள்ள போதும், அவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2018 – 3.2 (ஈ) | | |
| | சபைக்கு சொந்தமான எத்கால வாராந்த சந்தையிலிருந்து வருமானம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாராந்த சந்தையிலிருந்து வருமானம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேணடும். | எதிர்காலத்தில் குத்தகை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். |